Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆடி 5 ஆம் நாள் ஸபர் 6 (20-7 61) வியாழக்கிழமை | இதழ் 134

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

## ஊரடங்குச் சட்டம்

# விரைவில் நீக்கப்படும்

## செனட்டர் நடேசன் கேள்விக்கு பிரதமர் அளித்த பதில்

கொழும்பு, வியாழன்

ஊரடங்குச் சட்டம் மிக விரைவில் நீக்கப்படும் என பிரதம மந்திரி ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயகா நேற்று செனட் சபையில் அறிவித்தார்.

செனட்டர் நடேசனின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

ராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் மந்திரிசபை ஊரடங்குச் சட்டத்தை நீக்க முன் வந்திருப்பதாயும் பிரதம மந்திரி கூறினர்.

ராணுவமும், பொலிசாரும் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக வடபகுதியில் கள்ளக்குடியேற்றம் அரைப்பங்காகக் குறைந்து விட்டதெனக் கூறிய பிரதமர், திரு. நடேசன் கூறிய குறைபாடுகள் பற்றி விசாரணை நடத்தப்படும் எனவும் உறுதியளித்தார்.

## காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை விஸ்தரிப்பு

### மேற்கு ஜெர்மன் உதவி பூர்த்தி

கொழும்பு, புதன்

காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையின் அபிவிருத்திக்கும் அதன் விஸ்தரிப்புக்குமாக மேற்கு ஜெர்மனி கொடுக்கும் உதவி பூர்த்தியாகிவிட்டது. இந்தத் தொழிற்சாலைக்கான திட்டத்திற்கு சுமார் 4 கோடி ரூபாய் செலவிடப்படும். இந்த வாரத்தில் கார்ப்பரேஷன், தொழிற்சாலை வேலையை நடத்துவதற்கான பொருட்களையும் கருவிகளையும் வரவழைக்கும். புத்தளத்தில் கட்டுவதற்குத் திட்டமிட்டிருந்த சிமெந்து தொழிற்சாலை வேலைகள் உடனே ஆரம்பிக்கப்படும் என்றும் முன்பு திட்டமிட்டபடி புதிய டெண்டர்கள் இந்தத் தொழிற்சாலைக்கு அழைக்கப்படமாட்டாது என்றும் அந்த வேலைகளை காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலைவிஸ்தரிப்புக்காகஏற்படுத்தப்பட்டுள்ள டெண்டர்தாரர்களிடம் கொடுப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புத்தளம் தொழிற்சாலை நிறுவுவதற்காக ரூபாய் 3 கோடி வரை செலவிடப்படும் என்றும் தெரிகிறது.

## சமசமாஜக் கட்சியின் 16 கூட்டங்கள்

### ஆகஸ்ட்மாதம் நடைபெறும்

கொழும்பு, புதன்

இலங்கை சமசமாஜக் கட்சியின் பல இடங்களிலும் 1953-ம் ஆண்டு ஆகஸ்ட் ஹர்த்தால் தினத்தைக் கொண்டாடும் முகமாக பதினறு கூட்டங்களை நடத்தும். ஹர்த்தால் தினமாகிய ஆகஸ்ட் மாதம் 12-ந் திகதி மாபெரும் கூட்டமொன்று நடத்தப்படும். ஆகஸ்ட் 13-ம் திகதி 15 கூட்டங்கள் நடத்தப்படும்.

## ரூ. 540 லட்சம் நிதி திரட்ட அரசாங்கம் உத்தேசம்

கொழும்பு, புதன்

பொதுமக்களிடமிருந்து 540 லட்சம் ரூபாவைக் கடனுகப் பெற அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக நேற்றிரவு வெளிவந்த அரசாங்க வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பத்திரிகைகள்

கொழும்பு, புதன்

பத்திரிகைகளை எடுப்பதுபற்றிய யோசனையை அரசாங்கம் கைவிட்டுவிட்டதா? என்ற ஒரு கேள்விக்கு, செனட் சபையில் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா அளித்த பதிலில், "பத்திரிகைகளை எடுக்கும் யோசனை கைவிடப்படவில்லை. விரைவில் இது பற்றி நடவடிக்கை எடுக்கப்பெறும்" என்றுர்.

## ஏயர் சிலோன் உத்தியோகஸ்தர்களுக்கு இ. போ. ச.வில் வேலை

கொழும்பு, புதன்

ஏயர்சிலோனிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 15 தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையில் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

## "சொற்பகாலத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது"

### சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் மந்திரி இலங்கரத்ன பேச்சு

கொழும்பு, புதன்

"வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசாங்கம் தன்னுலான சகல முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான கமிட்டியின் சிபார்சுகள் நடைமுறைக்குக் கொண்டிவரப்படுவதும் இம்முயற்சிகளில் ஒன்று" என வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதத்தின் போது பேசுகையில் கூறினர்.

"சோஷலிஸத்தின் எதிரிகள் தங்கள் பலத்தைப் பெருக்கி அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தடுக்க முயல்கிருர்கள்.

அவர்கள் எவ்வளவு தாக்கினுலும் மக்களுக்குச் சேவை செய்வதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்" என்றும் மந்திரி தெரிவித்தார்.

"ஆகஸ்ட் 14ம் தேதி மாத்தளையில் மக்கள் வங்கி திறக்கப்படும். 1962 ஜனவரியில் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் செயல்படத் தொடங்கும். ஒன்றிரண்டு மாதங்களில் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இயங்கும். சீக்கிரம் கப்பல் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படுவதும் சாத்தியமாகும்" என தொடர்ந்து பேசுகையில் திரு. இலங்கரத்ன கூறினர்.

சொற்ப காலத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த முடியாதென்றும், உணவுப் பகுதியிலிருந்து லஞ்ச ஊழலைத் தொலைக்க தீவிர முயற்சி நடைபெறுவதாயும் கூறிய மந்திரி, ஒரு சம்பவத்தின் காரணமாய் 12 பேர் இந்த இலாகாவிலிருந்து தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாயும் குறிப்பிட்டார்.

ஆசியப் பொருளாதார மகாநாடுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## "தமிழர் பிரச்னை சரிவர தீர்க்கபடாவிடின் நாடு துண்டாகும்"

### ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு. மாக்கான் மாக்கார் விவாதம்

கொழும்பு, வியாழன்

"சிங்களம் தேசிய பாஷையாக்கப்பட்டிருக்கும் இச்சமயத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை உத்தியோக பாஷையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்" என நேற்று ஜனப் பிரதிநிதிகள் சபை விவாதத்தின்போதுபேசிய திரு. மாக்கான்மாக்கார் கூறினர்.

"அரசியல் காரணங்களுக்காகவே தமிழர்கள் போராட்டம் நடத்துகிருர்கள் என அரசாங்கம் கருதுகிறது. உண்மை அதுவல்ல. தமக்கு அநீதி வழங்கப்பட்டிருப்பதாகக் கருதும் தமிழர்கள், அதிலிருந்து விடுதலை பெறவே போராட்டம் நடத்துகிருர்கள். தமிழர் பிரச்சினை சரிவரத் தீர்க்கப்பட வேண்டும். அல்லது அது நாட்டைத் துண்டு போடும் நிலைமைக்குக் கொண்டுபோய் விடும்.

தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதபடி அரசாங்கம் இருந்து வருவது இன்றைய சூழ்நிலையில் நாட்டு மக்களின் ஐக்கியத்தைப் பயமுறுத்துகிறது.

நாட்டின் நிர்வாகத்தில் தாங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாய்த் தமிழ் மக்கள் கருதுகிருர்கள் - குறைபட்டுக் கொள்கிருர்கள். ஆனல், தமிழர்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்துவிட்டதாய் அரசாங்கம் கருதுவதுடன், இனிச் செய்வதற்கு எதுவுமில்லை என்றும் யோசிக்கிறது.

தாம் இரண்டாந்தரப்பிரஜையாக்கப்பட்டிருப்பதையிட்டுத் தமிழர்கள் வருந்துகிருர்கள் - குமுறுகிருர்கள்

பிரதேச ஒற்றுமை ஒன்று தான் இன்று வேண்டியிருக்கிறது; நாடு துண்டாடப்படுவதையல்ல.

பாஷைப் பிரச்சினை என்று ஒன்றுமில்லை என அரசாங்கம் கருதும் இச்சமயத்தில், இப்பிரச்சினைகளைப்பற்றி ஆராய ஐக்கிய தேசியக் கட்சி தயாராய் இருக்கிறது. அது மட்டுமல்ல. அரசியல் சர்ச்சைகளை விடுத்து அதற்கு மேலாக ஒரு

(5ம் பக்கம் பார்க்க)

## சுந்தரர் குருபூசை

கொழும்பு இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க ஆதரவில் நாளை வெள்ளி மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை நடைபெறும்.

## சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை

### இருபத்தாறரை மணிநேரம் விவாதம் நடக்கும்

கொழும்பு, புதன்

பார்லிமெண்டில் நேற்று ஆரம்பமான சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை சம்பந்தமான விவாதம் அடுத்த செவ்வாய்க்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

சபாநாயகரது அறையில் கட்சித் தலைவர்கள் நடத்திய ஒரு கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


# 'புகையிரதங்களில் மதுபானம் வழங்குவதைத் தடைசெய்க'

## கதிர்காமத் தொண்டர்சபை கோரிக்கை

கொழும்பு, புதன்

இலங்கைப் புகையிரதங்களில் மதுபானம் வழங்கப்படுவதைத் தடைசெய்யவேண்டுமென்று கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை அதன் விசேஷ நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

சபை உபதலைவர்களில் ஒருவரான திரு. ஆ. சின்னத்தம்பி தலைமை வகித்தார்.

கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரதங்களில் மதுவிலக்குக் கண்டிப்பாக அமுல்செய்யப்படவேண்டுமென்று தீர்மானம் மேலும் வற்புறுத்துகிறது.

இது சம்பந்தமாக திரு. செ. நடராசா பின்வரும் பிரேரணையைப் பிரேரித்தார்:- "இலங்கைப் புகையிரதங்களில் மதுபானம் வழங்கப்படுவதை கலாசார அமைச்சு தடைசெய்யவேண்டும். கொழும்பு-யாழ்ப்பாணம் புகையிரதங்களில் இளைஞர்களும், பல்கலைக் கழக மாணவர்களும், மற்றையோரும் நூற்றுக்கணக்கில் மதுபானம் அருந்துவது வழக்கமான நித்திய காட்சியாகிவிட்டது. குடிப்பவர்களினால் பிரயாணிகளின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிறது. அடிக்கடி பயணங்களை மேற்கொள்ளும் தல யாத்திரிகர்களும் வீண் அசௌகரியங்களுக் குள்ளாகிருர்கள். இளம்பெண்கள் தனிமையில் பயணஞ்செய்ய அஞ்சும்நிலையும் வரவர மேலோங்கி வருகிறது. குடிப்பவர்கள் புகையிரதப்பெட்டிகளில் குறுக்கும் நெடுக்கும் அலைந்துதிரிகின்றனர். புகையிரதங்களில் சில சமயங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் குடித்துவிட்டுப் போடும் அட்டகாசம் சொல்லுந்தரமன்று. பல சந்தர்ப்பங்களில் பிரயாணம்கூடத் தாமதிக்கப்படுகின்றது. எனவே ஏழைப்பிரயாணிகள், தலயாத்திரிகர்கள், இளம்பெண்கள், வாலிபர்கள் அனைவரது நலனை முன்னிட்டும் புகையிரதங்களில் மதுபான வகைகள் விநியோகிக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டுமென்று கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கலாசார அமைச்சையும் புகையிரத இலாகா ஜெனரல் மானேஜரையும் வேண்டிக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை கொழும்பு விவேகானந்த வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. வ. நடராசா அனுவதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. கதிர்காம யாத்திரிகர்களின் நலனை முன்னிட்டு கொழும்பு கப்பித்தாவத்தையிலும் மாத்தறையிலும் கொழும்பு கதிர்காக யாத்திரிகர் தொண்டர் சபையின் ஆதரவில் நடைபெறும் மடங்களுக்கு இவ்வருடம் பலஆயிரக் கணக்கில் மக்கள் உதவி தேடி வருவர் என எதிர்பார்த்து அதற்கான முன்னேற்பாடான ஒழுங்குகள் பற்றியும் நிர்வாக சபையினர் விரிவாக ஆராய்ந்தனர்.

### தேவை

சகல விதமான பலகார வகைகள் சாப்பாடு முதலியன தயார் செய்யத் தெரிந்த கடை அனுபவமுள்ள ஒருவர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். — ஈஸ்வரன் கபே, 143, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணனந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

### தேவை

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு நேர்மையுள்ள ஒரு பையன் தேவை. வயது 15க்கு மேற்பட்டதாகவும் 20 க்குட்பட்டதாகவும் இருக்க வேண்டும். மற்றவை நேரில் — என். எஸ். திருநாவுக்கரசு, 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### கேள்விப்பத்திரம்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாச சுன்னுகச் சேமச்சாலையில் இரும்பால் வெங்காயப் பட்டடைகள் போடுவதற்கு ஷெ சமாசத் தலைவர் கேள்விப்பத்திரங்கள் அழைக்கின்ருர். கேள்விப் பத்திரங்கள் தலைவர் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு பதிவுத்தபாலில் இடது பக்க மூலையில் வெங்காயப் பட்டடைக் கேள்விப்பத்திரம் என எழுதி 26-7-61க்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். விபரங்கள் ஷெ சமாசத்தில் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், 19-7-61. **வை. மகேசன்,** தலைவர்.

## அபிவிருத்தி திட்டங்களுக்கு கடன் திரட்ட முடிவு

கொழும்பு, புதன்

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக 54, 583, 200 ரூபாய் கடன் திரட்டப்போவதாக நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா முடிவு செய்திருக்கிருர்.

நீண்டகால, குறுகிய காலத் தவணையில் கடன் திரட்டும்படி, நிதி அமைச்சர் மத்திய வங்கிக்கு அதிகாரம் வழங்கியிருப்பது இதுவே முதல் தடவை.

நீண்டகால தவணைக்கடனுக்கு நிதிஉதவி செலுத்த அதிகமானவர்கள் தயங்கினர்கள் என்பது கடந்தகால அனுபவங்களிலிருந்து தெரியவருகிறது. நீண்டகால குறுகியகாலத் தவணையில் கடன் திரட்டுவது பொதுமக்கள் தமக்கு விரும்பிய தவணையை நிர்ணயித்துப் பண உதவிசெய்ய ஏதுவாக இருக்கும் என்று அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து மாத முடிவிற்குள் கடனுதவி செய்பவர்கள் தங்கள் நிதியைச்செலுத்தலாம்.

# புத்தசாஸனக் கமிஷன்

## சிபார்சுகள் பிரசுரமாகும்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

கொழும்பு, புதன்

பிரதமமந்திரி, கைத்தொழில் மந்திரி ஆகியோரின் அழைப்பின்பேரில் புத்தசாஸனக்கமிஷன் கூட்டம் நேற்று "டெம்பிள்ட்ரீஸ்" மாளிகையில் நடைபெற்றது. அதன்பின் கமிஷன் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

"பிரதமர், கைத்தொழில் மந்திரி ஆகியோரின் அழைப்பின் பேரில் கமிஷன் கூடி சில விஷயங்கள்பற்றி ஆலோசனை செய்தது. சில திருத்தங்களை அரசாங்கம் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளும். பிக்குகளின் உரிமை, சமயம் ஆகியவற்றைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். சட்டங்களை இயற்றி பிக்குகளைக் கட்டுப்படுத்துவதாய்க் கூறப்படுவது உண்மைக்கு மாருனது."

கைத்தொழில், கலாச்சார மந்திரிக்கு ஆலோசனை கூறும் பொருட்டு நிரந்தர உபகமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. கமிஷனின் சிபார்சுகளை அச்சிட்டு பொதுமக்களுக்கு வழங்குவதையும் முடிபு செய்யப்பட்டிருக்கிறது.

### கரடி தாக்கியது!

மாத்தளை, புதன்

எலகரா காடுகளை அளந்து வரும் அரசாங்க நிலவையாளர் திரு. டெல்பக்கொட, ஒரு துண்டு நிலத்தை அளந்தபிறகு முகாம்திரும்பும்வழியில், பெண் கரடி ஒன்று அவரைத் தாக்கியது.

அவருடன் வேலை செய்யும் தொழிலாளர், தாங்கள் வைத்திருந்த தடிகளால் கரடியைத் தாக்கி அவரைக் காப்பாற்றினர்.

### தொழில் நுட்ப மகாநாடு

கொழும்பு, புதன்

கொழும்பில். கொழும்புத் திட்ட தொழில்நுட்ப கவுன்சிலின் 72வது மகாநாடு நடைபெறவிருக்கிறது. திரு.ஜே.கே. தாம்ஸன் பதவியிலிருந்து விலகுவதால், புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யும் விஷயமும் இம்மகாநாட்டில் மேற்கொள்ளப்படும்.

## மந்திரி சில்வா சனிக்கிழமை கல்லோயா செல்கிருர்

கொழும்பு, புதன்

விவசாய நீர்ப்பாசன, நில அபிவிருத்தி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா சனிக்கிழமை கல்லோயாவுக்கு செல்கிருர்.

சமீபத்தில் உதவி விவசாய மந்திரி கல்லோயாப் பள்ளத்தாக்கிற்குச் சென்றதன் விளைவாக அங்கு தோன்றிய சம்பவங்களுக்குப் பின்னர் மந்திரி சில்வா இப்பொழுதுதான் முதல்தடவையாக கல்லோயாப் பகுதிக்குச் செல்கிருர்.

வேலைத்தலம், ஓட்டுத்தொழிற்சாலை, சீனிதொழிற்சாலை கரும்புத் தோட்டம், அம்பலம் ஓயா அணைக்கட்டு, இங்கினியாகலை மின்சார நிலையம், தொழில்நுட்பப் பயிற்சிநிலையம், தச்சுத்தொழிற்சாலை, மரமரியும் தொழிற்சாலை ஆகியவைகளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் மந்திரி சில்வா பார்வையிடுவார். கல்லோயா சபை நிர்வாகப் பகுதிகளின் தலைவர்களையும் மந்திரி சில்வா சந்தித்துப்பேசுவார். திங்கட் கிழமை காலையில் திரு. சில்வா கொழும்பு திரும்புவார்.

## வெள்ளை சாராயம் விலை குறையும்

கொழும்பு, புதன்

சில தினங்களுக்குமுன் கறுப்புத் போத்தல் சாராயத்தின் விலை எட்டு ரூபாயாகக் குறைக்கப்பட்டதுபோல் வெள்ளைப் லைப போத்தல் சாராயத்தின் விலையிலும் 2 ரூபாய் குறைப்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

வெளிநாட்டு மதுவகையின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கமாக இரண்டு வடிச் சாராயம், "மென்டிஸ் ஸ்பெஷல்" சாராயம் ஆகியவைகளின் விலைகளைக் குறைப்பது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

## கல்முனை எம். பி. விவகாரம்

கொழும்பு, புதன்

கல்முனை எம். பி. திரு. ஜி. அகமது தமிழரசுக் கட்சியை விட்டு விலகப் போவதாகச் செய்திருந்த முடிவை, புனராலோசனை செய்யுமாறு திரு.எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். திரு.எஸ். ஜே வியின் கடிதத்துக்குப் பதில் எழுதுவதற்கு அவர் இலங்கை திரும்பும்வரை தாம் காத்திருக்க முடிவு செய்திருப்பதாக திரு. அகமது தெரிவித்தார். ஜனப் பிரதிநிதிகள் சபையில். எந்தக் கட்சியையும் சேராமல் சுயேச்சையாக எதிர்க்கட்சியில் தாம் இருக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வான்காரருக்காக உடுப்பிட்டி எம். பி. ஏற்படுவார்

உடுப்பிட்டி, புதன்

ஏழுபேருக்கு மேல் வான்களில் ஏற்றிச் செல்ல முடியாதென்ற கட்டளையின் எதிரொலியால் யாழ்ப்பாணப் பகுதியில் பொலிசார் சில வான் நம்பர்களைப் பதிவு செய்கின்றனரென்றும், கொழும்பிலும் தென்னிலங்கைப் பகுதியிலும் பொலிசார் இவ்வித நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையென்றும், நேற்று முன் தினம் நெல்லியடியைச் சேர்ந்த வான்காரர் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்திடம் முறையிடு செய்த போது, இக்குற்றம் காரணமாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் வான்காரர் சார்பில் தான் ஏற்படுவதாக திரு. சிவசிதம்பரம் வாக்குறுதியளித்தார்.

இப் புதிய கட்டளை காரணமாக ஏராளமான பிரயாணிகள் நெல்லியடி, உடுப்பிட்டி அச்சுவேலிப் பகுதிகளில் பல மணி நேரம் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## பிரதமரிடம் டாக்டர் மலலசேகரா விளக்கம்

கொழும்பு, புதன்

பேராதனையில் ஒரு கூட்டத்தில் பெசிய பொழுது தெரிவித்த கருத்து சம்பந்தமாக பத்திரிகைகளில் முழு விபரமும் வெளியாகவில்லை என்றும் தமது பேச்சின் ஒரு சிறு பகுதிதான் வெளிவந்ததென்றும் டாக்டர் மலலசேகரா, பிரதமர் சிறிமாவுக்கு எழுதிய பதிலில் தெரிவித்துள்ளார்.

டாக்டர் மலலசேகரா பேசியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து அதற்கு விளக்கம் தருமாறு டாக்டர் மலலசேகராவிடம் பிரதமர் கேட்டிருந்தார்.

ஐ. நா. வில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் மலலசேகரா தமது பதவியை ஏற்பதற்காக சென்ற சனிக்கிழமை நியுயோர்க்கிற்குப் புறப்படவிருந்தார். ஆனல் அவர் பேராதனையில் பேசியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் காரணமாக அவரது பிரயாணம் நிறுத்தி வைக்கப்பட்டது.




# இந்தியத் துருப்புக்கள்மீது கடாங்கா சிப்பாய்கள் சுட்டனர்

## திருப்பிச் சுட்டதில் இருவர் மாண்டனர்

எலிஸபெத்வில்லி, ஜூலை 19
காங்கோவில் கடாங்கா எல்லையின் சாலையில் காவல்புரிந்துகொண்டிருந்த ஐ. நா. படையைச் சேர்ந்த இந்தியத் துருப்புக்கள் மீது கடாங்காத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இந்தியத் துருப்புக்கள் பதிலுக்குச் சுட்டதாகவும் ஐ. நா. அதிகாரிகள் அறிவித்தனர்.

கடாங்காத் துருப்புக்கள் மீது ஐ. நா. படையைச் சேர்ந்த இந்தியத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதில் இரண்டு கடாங்க போர் வீரர் கொல்லப்பட்டதாகவும் கடாங்கா அதிகாரிகள் ஐ. நா. வுக்குப் புகார் செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்தியப் படையினருக்குச் சேதம் இல்லையென்று, இன்று புதுடில்லியில் அரசாங்க அறிக்கையொன்று தெரிவித்தது.

---

## "ஈராக் பீதி நீங்கியுள்ளது"

பஹ்ரயின், ஜூலை 19
குவாய்த் மீது ஈராக் தாக்குதல் நடத்தக் கூடு மென்ற நிலைமை இப்போது நீங்கியுள்ளது என்று பாரசீக வளைகுடாவின் பிரிட்டிஷ் பிரதிநிதியான சேர் வில்லியம்ஸ் இன்று பஹ்ரயினில் தெரிவித்தார்.

குவாய்த்தில் சில தினங்கள் தங்கியிருந்த பின் சேர் வில்லியம்ஸ் இன்று பஹ்ரயின் திரும்பினர்.

குவாய்த்திலிருந்து மேலும் பிரிட்டிஷ் துருப்புக்கள் இன்று அங்கிருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

---

## தடுப்பு நடவடிக்கை டூனிஷியாவில் ஆரம்பம்

லண்டன், ஜூலை 19
டூனிசிலுள்ள பிரஞ்சுத் துருப்புக்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையாக கடற் படைத் தளத்திலுள்ள பிரஞ்சுத் துருப்புக்கள் வெளியே நடமாடவும் அவர்களுக்கு உணவு முதலியவைகள் போகாமலும் போக்குவரத்துப் பாதைகளை அடைக்கும் வேலையில் டூனிசியா பொலிசாரும் சிப்பாய்களும் பொதுத் தொண்டர்களும் இன்று ஈடுபட்டுள்ளனர்.

---

## தந்தையின் துப்பாக்கி மகளைக் கொன்றது

டெரொயிட் ஜூலை 19
பொலிஸ் அதிகாரி லோறன்ஸ் மாக்டானல்ட் தமது துப்பாக்கியை வீட்டிலே சுத்தம் செய்தபோது தற்செயலாக அது நழுவிக் கீழே விழுந்தது.

துப்பாக்கி விசை தவறியதால் துப்பாக்கிக்குண்டு ஒன்று வீட்டின் கதவைத் துளைத்துப் பின் 138 அடி தூரம் வரை சென்று இறுதியில் ஏழு வயது சிறுமியின் மீது பாய்ந்து அவளைக் கொன்றது. மற்றைய இருபது பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த இப்பிள்ளை மாக்டானல்டின் மகளாவாள்.

---

## அயூப்பிற்கு பாராட்டு

கராச்சி ஜூலை 19
காஷமீர் சம்பந்தமாக அமெரிக்காவில் பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் வெளியிட்ட கருத்துக்களுக்காக ஆஸாத் காஷ்மீர் அதிபர் ஜனாதிபதி அயூப்கானுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

---

## தாய்லாந்து மன்னர் இந்தியா வருவார்

புதுடில்லி, ஜூலை 19
தாய்லாந்து மன்னருக்கும் அரசிக்கும் ராஷ்டிரபதி ராஜன் பாபு இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இந்தியாவுக்கு விஜயம் செய்யும் திகதி இன்னும் நிச்சயப்படுத்தப்படவில்லை.

---

## ஹாங்காங்கில் ஆர். கே. நேரு

ஹாங்காங், ஜூலை 19
இந்திய வெளிவிவகார தலைமைக் காரியதரிசி திரு. ஆர். கே. நேரு மங்கோலிய குடியரசு தின விழாவில் கலந்து கொண்டுவிட்டு தாய்நாடுதிரும்பும்வழியில் ஹாங்காங் வந்து சேர்ந்துள்ளார். இவர் நாளை புதுடில்லிக்குப் பயணமாவார்.

ஹாங்காங் வந்து சேருவதற்கு முன்னர் பீக்கிங் சென்று சீனப் பிரதமர் சூ-என்-லாயையும் வெளிவிவகார மந்திரி மார்ஷல் சென்பியையும் சந்தித்துப் பேசினர்.

---

## சங்கர் குழந்தைகள் போட்டி

கல்கத்தா, ஜூலை
1961-ம் ஆண்டுக்கான சங்கர் குழந்தைகள் போட்டிக்கு உலகெங்குமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 16 வயதுக்கு மேற்படாதவர்கள் இதில் பங்கு பற்றலாம். இலக்கியம்,சித்திரம் வரைதல் ஆகிய விஷயங்களில் இதில் பங்கெடுத்துக்கொள்ள முடியும்.

---

# சிங்கப்பூர் அரசாங்கத்தின்மீது நம்பிக்கைத் தீர்மானம்

கோலாலம்பூர், ஜூலை 19
சிங்கப்பூர் சட்டசபை நாளை கூடும்பொழுது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானமொன்றை பிரதமர் லீகுவான்லீ கொண்டுவருவார்.

லீகுவான்லீயின் அரசாங்கம் பதவியேற்றபின் இரண்டு உப தேர்தல்களில் அவரது கட்சி தோல்வியடைந்தது.

சென்றவாரம் நடைபெற்ற ஒரு உபதேர்தலில் சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் டேவிட் மார்ஷல் வெற்றி பெற்று மீண்டும் அரசியலில் பிரவேசித்தார்.

வெற்றிபெற்றதும் பிரதமர் லீகுவான்லீ ராஜிநாமாச்செய்ய வேண்டும் என்று அவர் கூறினர்.

நேற்று நடைபெற்ற அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் திரு. லீ ராஜிநாமாச்செய்யப்போவதாக அறிவித்தாராம். ஆனல் கட்சியினர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து அவர் மீது நம்பிக்கை தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து நாளை அவர் நம்பிக்கைத்தீர்மானம் கொண்டுவருவார்.

---

## சீனவில் பஞ்சம்

ஹாங்காங் ஜூலை 19
வெள்ளப்பெருக்கின் காரணமாய் சீனவில் உணவுப் பஞ்சமும், அறுவடைக் கஷ்டமும் ஏற்பட்டிருப்பதாய் ஒரு செய்தி கூறுகிறது.

---

## பஞ்சாப் வாக்காளர்கள்

கல்கத்தா, ஜூலை 19
பஞ்சாபில் 1 கோடிக்குமேற்பட்ட வாக்காளர்கள், பட்டியலில் இடம்பெற்றிருக்கிறர்கள். இப்பட்டியல் 1,50,000 பக்கங்களைக்கொண்டிருக்கிறது.

---

## "மற்றெரு அணை வேண்டும்"

சென்னை, ஜூலை 18
தமிழ்நாட்டில் மேட்டூரைப் போல், மற்றெரு அணைக்கட்டு தேவைப்படுகிறது என முதன் மந்திரி காமராஜர் யோசனை கூறியிருக்கிறர்.

---

# லாவோஸ் இளவரசர்கள் கம்போடியாவில் சந்திப்பர்

வியன்டைன், ஜூலை 19
லாவோசில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான இறுதிப் பேச்சுவார்த்தைகளை கம்போடியா நகரான நாம்பென்னில் நடத்துமாறு லாவோசின் வலதுசாரித் தலைவரான இளவரசர் பூன் ஊமுக்கு நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா விடுத்த வேண்டுகோளை வலதுசாரித் தலைவர் பூன்ஊம் ஏற்றுக்கொண்டார்.

முதலில் இப்பேச்சுவார்த்தைகள் லாவோசில் மன்னர் தலைநகரான லுவாங்பிரபாங்கில் நடைபெறுவதாக இருந்தது. இப்பொழுது பாரிஸில் தங்கி இருக்கும் இளவரசர் சுவன்னபூமா தாம் உடல்நலம் குன்றியிருப்பதால் பேச்சுவார்த்தைகளை நாம்பென்னில் வைத்துக் கொள்ளும்படி இளவரசர் பூன் ஊமுக்கு எழுதியிருந்தார்.

இடதுசாரியான பதட்டலாவோ தலைவர் இளவரசர் சொவன்வாங்கிற்கு இளவரசர் சுவன்னபூமா எழுதிய கடிதத்தில் நாம்பென்னில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும்படி கேட்டிருந்தார்.

லாவோஸ் சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெற்று வந்த சர்வதேசக்கமிஷன் மகாநாடு சில நடைமுறை அலுவல்கள் சம்பந்தமாக முட்டுக்கட்டை ஏற்பட்டது. கமிஷனின் கூட்டு உதவித் தலைவர்களாக ரஷ்யப்பிரதிநிதி புஷ்கினும் பிரிட்டிஷ் பிரதிநிதி மால்கம் மக்டனல்டும் சந்தித்துப்பேசியதன் பயனக முட்டுக்கட்டை நீங்கி மகாநாடு இன்று மீண்டும் கூடவிருக்கிறது.

---

## அங்கோலாவுக்கு மேலும் துருப்புக்கள்

லிஸ்பன், ஜூலை 19
வடக்கு அங்கோலாவில் தேசியவாதிகள் பெருமளவில் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளதாக போர்ச்சுக்கல்செய்தி ஸ்தாபனம் இன்று அறிவித்தது.

இன்று லிஸபனிலிருந்து மேலும் 1500 போர்ச்சுக்கல் துருப்புக்கள் அங்கோலாவுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

---

## வெள்ள நிவாரணம்

புதுடில்லி, ஜூலை 18
பாரதசெஞ்சிலுவைச் சங்கம் பூனவுக்கும், ஒரிஸாவுக்கும் தலா 10,000 ரூபாய் வெள்ள நிவாரணம் வழங்கியிருக்கிறது.

---

## ஈராக்குக்கு ரஷ்ய உதவி

மாஸ்கோ, ஜூலை 18
ஈராக்கில் அணுஉலையொன்றை அமைக்க ரஷ்யா உதவியளிக்கும் என மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

---

## 500 பதில் துருப்புகள்

புதுடில்லி, ஜூலை 19
காங்கோவில் கடமையாற்ற 500 புதிய துருப்புக்களை ஆகஸ்ட் மத்தியில் இந்தியா அனுப்பவிருக்கிறது.

---

## பூகம்ப மகாநாடு

டோக்கியோ, ஜூலை 18
டோக்கியோவில் 23 நாடுகளைக்கொண்ட பூகம்ப மகாநாடு ஒன்று நடைபெறுகிறது.

---

# 'சிம்மாசனப் பிரசங்கம் திகைப்பு, ஏமாற்றம் தருகிறது'

## செனட்டர் டி' சூசா கருத்து

கொழும்பு, புதன்
செனட்சபையின் நேற்றைய கூட்டத்தில் செனட்டர் டொரிக் டி' சூசா பேசிக் கொண்டிருந்த சமயம் சபைத்தலைவர் சேர் சிரில் டி' சொய்சா குறுக்கிட்டு ஒரு குறிப்புத் தெரிவித்ததை ஆட்சேபித்து செனட்டர் சூசா சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

பின்னர் சபைத் தலைவரும் செனட்டர் சூசாவும் சந்தித்துப் பேசியதன் பயனக சபை தேநீர் இடைவேளைக்குப் பின் மீண்டும் கூடியபொழுது செனட்டர் டொரிக் டி' சூசா சபைக்கு வந்தார். அவர் சபைக்கு வந்ததும் எதிர்க் கட்சியினரும் அரசாங்கக் கட்சியினரும் மேசையில் தட்டி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

செனட்சபை அதன் தலைவர் சேர். சிரில் டி' சொய்சாவின் தலைமையில் நேற்றுப் பிற்பகல் கூடியது.

"சிம்மாசனப்பிரசங்கத்திற்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைக்கு சமசமாஜக் கட்சியின் சார்பில் திருத்தப் பிரேரணையைச் சமர்ப்பித்து செனட்டர் டொரிக் டி' சூசா பேசினர். "சிம்மாசனப் பிரசங்கம் எனக்கும் எமது கட்சிக்கும் பெரும் திகைப்பையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது" என்று செனட்டர் டொரிக் டி' சூசா கூறினர்.

"சாதாரண மனிதனின் வார்த்தையில் சொல்வதானல் சிம்மாசனப் பிரசங்கம் ஒரு "குப்பை" என்றுதான் சொல்ல வேண்டும். லஞ்சக் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்குத் தனது சக்திக்குட்பட்ட சகலவற்றையும் அரசாங்கம் செய்து முடித்துவிட்டு இன்னமும் நேர்மையைப்பற்றிப் பேசுகிறது" என்று செனட்டர் சூசா கூறினர்.

"அரசாங்கத்தின் வங்குரோத்து நிலைக்கு இடதுசாரிகள் தான் காரணமென்ற ஒரு அபிப்பிராயத்தை பொதுமக்கள் மனத்தில் ஏற்படுத்தக் கூடிய ஒருதுரதிருஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. துரதிருஷ்ட வசமாக அரசாங்கம் இடதுசாரியாகப் போய்க்கொண்டிருக்கவில்லை" என்று செனட்டர் சூசா கூறினர்.

இச்சந்தர்ப்பத்தில் சபைத் தலைவர் குறுக்கிட்டு, "இந்த நாட்டிலிருந்த இடதுசாரிகள் மறைந்து விட்டார்கள் என்றே நான் நினைத்தேன்" என்று கூறினர்.

"அது உங்கள் கருத்தாக இருக்கலாம்" என்று பதிலளித்த செனட்டர் சூசா தலைவரின் 'தவருன குறுக்கீட்டுக்கு' ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக தனது பேச்சை நிறுத்திக் கொண்டு சபையிலிருந்து வெளியேறினர்.

தான் கூறியதற்கு விளக்கம் தெரிவிக்க தலைவர் முயற்சி செய்தபோதிலும் அதற்கு செவிமடுக்கமறுத்து செனட்டர் சூசா வெளியேறினர்.

சபை தேநீர் இடைவேளைக்குப்பின் மீண்டும் கூடிய பொழுது செனட்டர் சூசாவை 'சேம்பரில்' சந்தித்துப் பேசியதாகவும் தப்பபிப்பிராயம் நீக்கப்பட்டுவிட்டதாகவும் தலைவர் சேர். சிரில் டி' சொய்சா தெரிவித்தார்.

செனட்டர்லயார்ட்ஜயசுந்தரா பேசிமுடித்தபின் செனட்டர் சூசா தமது உரையைத் தொடர்ந்து நிகழ்த்த சபை அனுமதியளிக்க வேண்டுமென்று தலைவர் கேட்டுக் கொண்டார்.

செனட்டர் டொரிக் டி' சூசா சபைக்குத்திரும்பியதும் எதிர்க் கட்சியினரும் அரசாங்கக் கட்சியினரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

---

# ஜனதிபதி அயூப்கான் கராச்சி திரும்பினர்

## 'கென்னடியை சமரசம் செய்துவைக்குமாறு கேட்கவில்லை'

கராச்சி, ஜூலை 19
அமெரிக்காவுக்குச் சென்று ஜனதிபதி கென்னடியுடன் பேச்சுவார்த்தை நடத்திய பாக்கிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் இன்று கராச்சி வந்துசேர்ந்தார். கராச்சி விமான நிலையத்தில் அவருக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்றிரவு லண்டனிலிருந்து ஜனதிபதி அயூப்கான் புறப்பட்டபொழுது நிருபர்களின் கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில்" காஷ்மீர் தகராறு சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள பூசலைத் தீர்த்துவைப்பதற்கு மத்தியஸ்தராக கடமையாற்றும்படி ஜனதிபதி கென்னடியை நான் கேட்கவில்லை" என்று கூறினர்.

---

## ரயில் முன் விழ்ந்து மாண்டார்

ஜாஎல, செவ்வாய்
செபஸ்தியான டொறிகோ (வயது 25) என்வர்ஓடும்புகையிரதத்துக்கு முன்னல் வீழ்ந்து மாண்டார். மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### மணிவாக்கு

அபிப்பிராயவித்தியாசம் இருக்கலாம். ஆனால் அதனை முன்னிட்டு மனக்கசப்பு வந்துவிடலாகாது. —தர்மசக்கரம்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆடி மீ 5உ. (20 7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## வீடுகள்

குடியிருக்க புதிய வீடுகள் கட்டிக்கொள்ள திருவுளச் சீட்டுப்போட்டு ஒவ்வொரு தொகுதிக்கும் 75 பேர்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாய் இப்போது கடன்கொடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பெரும் போட்டிகள். ஒவ்வொரு தொகுதியிலும் பல நூறுபேர்கள் மனுச்செய்கின்றனர். எழுபத்தைந்து பேர் போக மற்றவர்களுக்கெல்லாம் ஏமாற்றம்.

சீட்டு விழுந்த அதிர்ஷ்டசாலிகளுக்கும், இக்காலத்தில் இரண்டாயிரம் ரூபாய், ஒரு சிறிய குடிசை கட்டவும்போதாது. வீடு கட்டுவதற்கான இடத்துக்கு அதிக விலையாகும். கடனாகக் கிடைக்கும் இரண்டாயிரம் ரூபாயை வீண் செலவுசெய்துவிட்டு, வீடுகட்ட முடியாமல் பலர் தவிக்கக்கூடும். அரசாங்கம் லாட்டரி போட்டு, கடன் கொடுப்பதுடன் நிறுத்திக்கொள்ளாமல் வீடு கட்டுவதற்குக் கூடுமான பல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

சிமிந்தி, செங்கல், ஓடுகள், மரம் முதலியவற்றின் விலை இப்போது மிக அதிகம். 'மேசன்மார்'கூலியும் மிகஉயர்ந்துள்ளது. லாட்டரி போட்டு, கடன் வாங்கி வீடு கட்டுபவரில் பலரும் எளியவர்களே. இச்சாமான்களை அதிக விலைகொடுத்து வாங்கி, 'மேசன்' மார்களுக்கும் அதிக சம்பளம் கொடுத்து அவர்கள் வீடுகட்டுவதென்பது மிகவும் கஷ்டம்.

இரண்டாயிரம் ரூபாய்களுக்குள், வீடு கட்ட முடியாமல் அரைகுறையாகக்கட்டி, மேலும் கடன்காரர்களாகவும், முடிவில் கட்டிய வீடுகளையும் இழந்துவிடவும்கூடிய ஆபத்து ஏற்படலாம். அவ்விதம் ஏற்படாமல், தக்க பாதுகாப்புகளையும், உதவிகளையும் அவர்களுக்குச் செய்துகொடுக்கவேண்டும்.

இந்த ஏற்பாடு வரவேற்கத் தக்கதேயென்றாலும், நாட்டிலுள்ள வீடில்லாப் பிரச்சினையை இது ஓரளவும்கூட தீர்க்காது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடியிருக்க சொந்தத்தில் ஒரு வீடு இருக்கும்படி செய்வதற்கு, பெரிய அளவில் திட்டம்போடவேண்டும். இப்பெரிய பொறுப்பை தலைமை அரசாங்கம்மட்டும் நிறைவேற்ற முடியாது. எல்லா ஸ்தலஸ்தாபனங்களுக்கும் இப்பொறுப்பைப் பகிர்ந்துகொடுப்பதுடன் இதற்காகஅவசியமாயின் பணம் திரட்டவும் அவற்றுக்கு அதிகாரமளித்தால், இவ்வேலை அதிக விரைவாக முடிவதாக இருக்கும். வீடுகட்டும் கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைத்து அவற்றுக்குக் கூடுமான உதவி செய்யலாம்.

இதே சமயம் ஸ்தலஸ்தாபனங்களுக்குச் சொந்தமான 7000 வீடுகளை, அதில் குடியிருப்பவர்களுக்கே, தவணை மீது சொந்தமாக்க அமைச்சர் சட்டம் கொண்டுவரப்போவதாயும் 10 வருடங்களுக்குமேல் ஒரு வீட்டில் வாடகைசெலுத்தி தொடர்ந்து குடியிருப்பவர்களுக்கு இதனால் அதிக நன்மை ஏற்படுமென்றும் ஒரு நல்ல செய்தி கூறுகிறது. இந்த வாய்ப்பு எல்லாக் குடும்பங்களுக்கும் கிடைப்பதாக இருப்பின்

# நல்ல குடி தண்ணீர் கிடைக்க வழிஏற்பட்டு விட்டது

## மக்களுக்குப் பயனுள்ள மகத்தான சாதனை

ஹாம்பர்க், ஜூலை 19

கண்ட இடங்களில் கிடைக்கும் அசுத்த நீரை உட்கொள்வதுதவிர வேறு வழியில்லாமல் இருந்து அதனால் பல நோய்களுக்கு உள்ளாகுபவர்களுக்கு ஜேர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ள சுத்த நீர் தயாரிப்பு சாதனம் ஒரு வரப்பிரசாதமாகும். இந்த சாதனம் நீரிலுள்ள அசுத்தத் தன்மையையும் கிருமிகளையும் போக்குவதுடன் அவைகளில் விஷப்பொருள்கள் கலந்திருந்தாலும் அதை நீக்கி குடிப்பதற்கு ஏற்ற தண்ணீராக மாற்றிவிடுகிறது. அவசர நிலைமை ஏற்பட்டால் இந்த சாதனத்தைக் கொண்டு உடனடியாக நல்ல குடிதண்ணீரைத் தயாரித்துக்கொள்ள முடியும். 24 மணி நேரத்தில் 1,60,000 லீட்டர் நல்ல குடி தண்ணீரை இந்தச் சாதனம் தயாரிக்கக்கூடியது. ஒரு நாளைக்கு ஒருவருக்குத் தலா 5 லீட்டர் தண்ணீர்வீதம் 36,000 பேர் ஜனத்தொகை கொண்ட ஒரு நகரத்திற்கு தண்ணீர் விநியோகிக்க இந்த சாதனம் (ஒரு யூனிட்) போதுமானது.

இந்த சாதனம் ஒரு வண்டியில் பொருத்தப்பட்டிருப்பதால் எந்தஇடத்திற்கு வேண்டுமானாலும் இதைக் கொண்டு செல்லலாம். நீண்டகாலமாக உபயோகிக்கப்படாத மிக அசுத்த நீரையும் நல்ல குடிதண்ணீராக மாற்றிவிட முடியும். இதனால் வசிக்க லாயக்கற்ற இடங்கள் இனி வசிக்கும்படியானதாக மாறிவிடும். பனிக்கட்டிகளின் கீழ்ப்பகுதியிலுள்ள நீரையும் இந்த சாதனத்தைக் கொண்டு பயன்படுத்தமுடியும்.

இந்த அரிய சாதனம் பல வருஷ ஆராய்ச்சிகளின் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ரசாயனப் பொருள்களைக்கொண்டு இயங்கும் இந்த சாதனத்தில் வடிகட்டிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. 'குளோரை'ன் உபயோகிக்கப்படுவதால் எத்தகைய கிருமிகளும் கொல்லப்பட்டுவிடுகின்றன. கஸோலினினால் இயங்கப்படும் என்ஜின் ஒன்றும் இதில் இடம்பெற்றுள்ளது. தண்ணீரைஉறிஞ்சக்கூடிய அழுத்தமுள்ள குழாய்கள் இத்துடன பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த சாதனத்தை அப்படியே தூக்கி எந்த இடத்திலும் பொருத்தலாம். வண்டிகள், லொறிகள் எதில்வேண்டுமானாலும் வைக்கலாம். ஒரே ஒரு ஆபரேட்டரினால் இதை இயக்கச் செய்யமுடியும்.

அசுதத நீரை குழாய்மூலம் உறிஞ்சுவதிலிருந்து மற்றொரு குழாய்வழியாக நல்ல குடிதண்ணீர் வரும்வரையில் எல்லா வேலைகளும் தானே நடைபெறுகின்றன. இந்த சாதனத்திலேயே ஆராய்ச்சி செய்வதற்கான வசதியுமுள்ளது. நல்ல குடிதண்ணீர்தானா என்பதையும் அந்த ஆபரேட்டரே பரிசோதித்தும் பார்த்துவிடமுடியும். நல்ல குடிதண்ணீர் கிடைக்காமல் தவிக்கும் நாடுகளுக்கு இந்த சாதனம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

# சத்திர சிகிச்சைக்கு

## கால நிலை உதவி

காலநிலை மனிதனை உற்சாகப்படுத்தவோ, உற்சாகமில்லாமல் இருக்கச் செய்யவோ செய்கிறது என்பதை வைத்திய நிபுணர்களும் காலநிலை ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர். இந்த உண்மை ஆராய்ச்சிகள் பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி ஏற்படுகிறது என்பது ஒரு சிக்கலான விஷயம் என்று விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. இருந்தாலும் மேற்கு ஜேர்மன் ஆராய்ச்சியாளர்கள் இதைப் பற்றி முயற்சிகள் செய்து வருகின்றனர்.

ஜேர்மன் கால நிலை ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் உங்கேஹார் கால நிலையைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒருபுது தத்துவத்தை உருவாக்கியுள்ளார்.

அந்த தத்துவப்படி காலநிலை 6 பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. நல்ல கால நிலை, மாறும் கால நிலை, நிரந்தரமாகும் கால நிலை, மோசமான கால நிலை என்று இம்மாதிரி பிரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால நிலைகளால் நோயாளிகள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் அல்லது அனுகூலமடைகிறார்கள் என்பது ஆராயப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சிகளிலிருந்து நல்ல காலநிலையால் மனித உடலுக்கு நன்மை ஏற்படுகிறது. என்றஎண்ணம் ஊர்ஜிதமாகியுள்ளது. அதிகஉஷ்ண கால நிலையில் உடல் பாதிக்கப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வைத்திய நிபுணர்கள் காலநிலை நிபுணர்களும் சேர்ந்து ஒத்துழைக்க இத்தத்துவம் மிகவும் பயன்படுகிறது. சில நோயாளர்களுக்குச் சத்திர சிகிச்சை செய்யுமுன் கால நிலை நிபுணர்கள் ஆலோசனை கோரப்படுகிறது அவர்கள் தெரிவிப்பதற்கேற்ப காலநிலை அனுகூலத்தை அறிந்து சத்திரச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. மேலும் இத்துறையில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# "தமிழ் பிரதிநிதிகளை தடுப்புக்காவலில் வைத்திருப்பது வாக்குரிமையை மறுப்பதாகும்"

## உடுப்பிட்டி எம். பி.யின் திருத்தப் பிரேரணை விபரம்

**கொழும்பு, புதன்**

**கவர்னர்ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தைத் தொடர்ந்து ஐக்கியதேசியக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி லங்கா சமசமாஜக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய 5 எதிர்க்கட்சிகளும் திருத்தப்பிரேரணைகளைக் கொண்டுவந்துள்ளன.**

ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் கொண்டுவந்துள்ள திருத்தப் பிரேரணையில் அரசாங்கத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்னும் கருத்தைத் தெரிவித்துள்ளன.

உடுப்பிட்டி எம். பி. திரு சிவசிதம்பரத்தின் திருத்தப் பிரேரணை வருமாறு:

"அமைதியும் ஒழுங்கும் நிலவுவதற்கு அரசாங்கம் செயலாற்றுமென சிம்மாசனப் பிரசங்கத்திற் கூறப்பட்டிருந்த போதிலும் பொதுஜனப்பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவசரகாலச் சட்டவிதிகளைப் பயன்படுத்தி தமிழ் பேசும் கக்களின் நியாயமான உரிமைகளை அடக்கி ஒடுக்கிவருவது பற்றியும், ஐ. நா. மனித உரிமைச் சாசனத்தில் அடங்கியுள்ளன மொழி, பிரஜாவுரிமை, பிரதேசம் சம்பந்தமான உரிமைகளை வழங்கத்தீவிர முயற்சி எதுவும் செய்யாததுபற்றியும் வருந்துகின்றேன்.

பார்லிமெண்டின் நடவடிக்கைகளில் பங்குபற்றி தமிழ்ப்பேசும் மக்களின் கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களின் பிரதிநிதிகளில் அநேகமாக எல்லோருக்கும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதால் சபையின் நடவடிக்கைகள் ஜனநாயகத்தைக் கேலி செய்வதாய் இருக்கின்றன.

தெரிவு செய்யப்பெற்ற இப்பிரதிநிதிகளைத் தடுப்புக் காவலில் வைத்திருப்பது இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் வாக்குரிமையை மறுப்பதற்கு ஒப்பாகும்.

தமிழ் பேசும் மக்களால் தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகள் பொதுவாழ்விற் பங்குபற்ற முடியாமல் இருக்கையில் ஏராளமான மக்களைக் கைது செய்து விசாரணையின்றியே தடுப்புக்காவலில் வைக்க இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தங்கள் அரசாங்கம் அதிகாரம் அளித்திருப்பதுடன் இந்த நாட்டிலே அன்னியர் ஆட்சியின் போதுதானும் நடவாத முறையில் ஆலயங்களை ஆக்கிரமிக்கவும், வீடுகளிற் பிரவேசிக்கவும், பெண்களை மானபங்கப்படுத்தவும், ஆண்களை இரக்கமின்றி அடிக்கவும், வீடுகளுக்குத் தீவைக்கவும், கொள்ளையடிக்கவும் அனுமதித்திருப்பது பற்றி வருந்துகின்றேன்.

இத்தகைய செயல்களினாலும், நீதி பரிபாலன விஷயங்களில் தலையிடுவது போன்ற காரியங்களினாலும் அரசாங்கம் தனது இலட்சியத்திலின்றும் விலகிவிட்டது இந்நாட்டு மக்களின் சகல பிரிவினருக்கும் நீதியும் சமத்துவமும் அளித்துச்

(8ம் பக்கம் பார்க்க)

மக்கள் அதிக திருப்தியுடன் அமைதியாக வாழமுடியும். அரசாங்கம் அடிக்கடிகூறும் சமதர்ம நோக்கத்துக்கும் இது ஒத்ததாகும்.

### ஐயாறன் எழுதுவது

நேற்று செல்வச்சன்னிதிக்குச் சென்றதைப் பற்றி எழுதினேன் அல்லவா? திரும்பி வரும்போது, இதுவரை கண்டிராத, கேட்டிராத ஒரு சம்பவத்தைக் கண்டேன்.

கொட்டு முழக்கத்துடன் ஒரு பிரேதஊர்வலம் வந்து கொண்டிருந்தது. பட்டாசுகள் வெடித்தன. பெரிய கூட்டம். கொள்ளிக் குடத்தை எடுத்துவந்தவர் தடுமாறி, அக்குடத்தைக் கீழே போட்டு உடைத்துவிட்டார்.

இதைக் கண்டதும் சிலருக்குக் கோபமும் ஆத்திரமும் வந்துவிட்டது. கொள்ளிக்குடக்காரரைச் சூழ்ந்து தாக்க வந்தனர். வண்டி அப்படியே நின்றுவிட்டது. கொலைகூட விழுமோ என்று தோன்றியது. சிலர் குறுக்கிட்டு நிலைமை மோசமாகாமல் தடுக்க முயன்றனர். பிறகு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. நாங்கள் வந்துவிட்டோம்.

* * *

இறந்தவருக்கு மரியாதை செலுத்துவதேபிரேதஊர்வலம் கிரியை இவற்றின் நோக்கம். கொள்ளிக் குடத்தை, இறந்தவரின் பிள்ளைகள் எடுத்துச் செல்வது சில குடும்பங்களின் வழக்கம். இங்கு சமீபத்தில் ஓர் அன்பர் தம் அன்னையின் பிரேதஊர்வலத்தில்,கொள்ளிக் குடத்தை, பிறரிடம் கொடுக்காமல் தாமே எடுத்துச் சென்றார். தம் அன்னைக்குத் தாம் செய்யும் கடைசிக் கடமை அது என்றும், பிறரிடம் அதை தாம் ஒப்புவிக்க விரும்பவில்லை என்றும் சொன்னார்.

* * *

இங்கு கல்யாணம், செத்தவீடு என்றால் பெரும்பாலும் மதுபானம் வழங்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இதனால் பெரும் செலவும் கடனும். சில நல்ல குடும்பங்களில் இந்த வழக்கமில்லை. மதுபானங்களை இவ்வித சந்தர்ப்பங்களில் பாவிக்கும் வழக்கம் எப்படி, எப்போது புகுந்ததோ தெரியவில்லை. இதனால் செலவு ஒருபுறமிருக்கச் சூழ்நிலையும் புனிதமும் கெடுவதாக இருக்கின்றது. தடுமாற்றங்களும் ஏற்படுகின்றன.

சமூக சீர்திருத்தக்காரர்களும் தலைவர்களும் இதில் கவனம் செலுத்தி இந்தப் பழக்க வழக்கங்களைமாற்றமுடியாதா?

* * *

யாழ்ப்பாணத்தில் புதிய புதிய கடைகளும் கைத்தொழில்களும் ஏற்பட்டு, நகரை அழகு செய்கின்றன. கே. கே. எஸ். ரோட்டிலே, ஒரு புதிய கடை நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது. நவீன முறையில் கவர்ச்சியாக அக்கடை காட்சியளிக்கிறது. கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணம் இத்தீவிலே பெரிய நகரமாக வளர்ந்து வருகின்றது.

கைத்தொழிலும் வர்த்தகமும் வளர்ந்து வருவதால் இங்கு பலருக்கும் வேலை கிடைக்கவும், செல்வம் செழிக்கவும் வழி பிறக்கும்.

* * *

சென்னையிலே பிராமணர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைப்பதற்குத் தடையேற்பட்டதும், அவர்கள் கைத்தொழில், வர்த்தகம் இவற்றில் கவனம் செலுத்தி, பெரிதும் முன்னேறி பலருக்கும் வேலை அளிப்பதாயும், நாடும் முன்னேறி வருவதாயும் அங்கிருந்து வந்த ஓர் அன்பர் தெரிவித்தார்.

அந்த முன்மாதிரி இங்குள்ள தமிழருக்கும் வழி காட்டி உதவ வேண்டும்.

# கல்லோயா சபை

## 10 லட்சம் போத்தல் மதுபானம் தயாரிக்கும்

கல்லோயா, புதன்

கல்லோயா சபை மதுபானம் தயாரிப்பதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. சீனிப்பாகிலிருந்து மதுபானத்தை சபை தயாரிக்கும். இத்தயாரிப்பு செப்டம்பர் மாதத்திலிருந்து ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

கைத்தொழில் மந்திரியும் நில, நீர்ப்பாசன மந்திரியும் சந்தித்துப் பேசிய பின்னரே இவ்விதம் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வருடத்தில் சுமார் 10 லட்சம் போத்தல் மதுபானத்தைத் தயாரித்து தற்போது குறைக்கப்பட்டுள்ள கலால் வரியின்படி போத்தல் ஒன்றுக்கு ரூ. 8 வீதம் விற்க சபை ஆலோசித்துள்ளது.

## கி. ச. தலைவர் தாக்கப்பட்டு மரணம்

கலுவீவா கிராமச் சங்கத் தலைவர் திரு. எம். ஜி. மென்டிஸ் கீனுகிரியாவா எனுமிடத்தில் சிலரால் தாக்கப்பட்டார். பொல்காவல ஆஸ்பத்திரிக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு அவர் மரணமானார்.

திரு. மென்டிஸ் ஐந்து பேரோடு ஒரு கிராமச்சங்க அங்கத்தவரைச் சந்தித்துவிட்டுத் திரும்புகையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது என பொலிஸ் அறிக்கை தெரிவிக்கிறது.

இதுசம்பந்தமாக ஐந்துபேர் பொலிஸ் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# 'அமெரிக்காவுக்கு போர்வெறி ஏற்பட்டுள்ளது'

## மாஸ்கோ ரேடியோ குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஜூலை 12

பெர்லின் சம்பந்தமாக ரஷ்யா தெரிவித்துள்ள சமாதான யோசனையை மேற்கு நாடுகள் நிராகரித்த செயல்பற்றி மாஸ்கோ கருத்துத் தெரிவித்துள்ளது.

"மேற்கு நாடுகளின் இந்த நிராகரிப்பின்மூலம் சமாதானத்தில் அவர்களுக்கு நாட்டமில்லை என்பது தெரிகிறது. அமெரிக்காவுக்கு என்றுமில்லாத அளவு போர் வெறி ஏற்பட்டுள்ளது" என மாஸ்கோ ரேடியோ அறிவித்தது. பெர்லின்பற்றி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மாஸ்கோவில் சமர்ப்பித்துள்ள கடிதத்துடன் இணைந்த முறையில், அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, இன்று நிருபர்களைக் கூட்டி சில யோசனைகளை வெளியிடுவார் என வாஷிங்டன் செய்தியொன்று கூறியது. திரு. கென்னடி ராணுவ ஆலோசகர்களுடன் கலந்ததாயும் அச் செய்தி கூறுகிறது.

## யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகம்

### அடிக்கடி தடைப்படுவதால் கஷ்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி மின்சார விநியோகத்தில் கோளாறு ஏற்பட்டுவருவது இப்போது சகஜமான விஷயமாகிவிட்டது. கடந்த சில மாதங்களில் பலதடவைகளில் மின்சார விநியோகம் தடைப்பட்டதனல் வீடுகளிலும் இதர இடங்களிலும் பலருக்குச் சங்கடம் ஏற்பட்டது.

நேற்று மாலையும் இதே போல் மின்சார விநியோகம் தடைப்பட்டது. மாலை 6-50க்கு ஏற்பட்ட கோளாறு 7-20க்குத் தான் முடிந்தது.

# கருவாடு என்ற பெயரில் பசளைவிநியோகிக்கப்பட்டது

## பார்லிமெண்டில் திரு. பிலிப் புகார்

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் ரூத்தல் எட்டுச் சதம் பெறுமதியான பசளைகளை 40 சதமாக வாங்கி தன் கிளை ஸ்தாபனங்களுக்கு கருவாடு என்று விநியோகித்துள்ளதாக மாஜி உணவு மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன பார்லிமெண்டில் நேற்று கூறினர்.

ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர் கருவாடு என்று விற்கப்பட்ட இந்தமாதிரி பசளையை வாங்கியிருக்கிருர் என்று திரு. டட்லி சேனநாயகா பேசுகையில் தெரிவித்தார். மேலும் அவர் இந்த மாதிரிக் கருவாடுகள் அதிகமாக கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் லாரிகளில் கிளை ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட்டது என்றும் அவை இப்பொழுது வெறும் மாவாகத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றும் கூறினர்.

கருவாட்டு இலாகாக்வுக்குப் பொறுப்பாயுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன டைரக்டர் திரு. டி. எல் டப்ளியு. ராஜபக்ஷ திரு. பிலிப் குணவர்த்தனவின் குற்றச்சாட்டை மறுத்துக் கூறியதுடன் திரு. குணவர்த்தனவோ அல்லது எந்த அரசியல்வாதியோ தங்கள் ஸ்டோரிலுள்ள கையிருப்புக் கருவாடுகளைப் பார்வையிட்டு அவை பசளைதானு என்பதைக் கூறலாம் என்ருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கொழும்பிலுள்ள பிரபலமான கருவாட்டு இறக்குமதி ஸ்தாபனம் ஒன்றை மேற்கூறிய கருவாடுகள் பற்றித் திரும்பவும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் விசாரித்துள்ளது என்ருர்.

### தமிழர் பிரச்சினை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டமேஜை மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென வற்புறுத்தி வந்திருக்கிறது.

தமிழ் மக்களை அரசாங்கம் திருப்திப்படுத்தத் தவறியது, நாட்டின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் தடை செய்துவிட்டது" என்றும் திரு. மாக்கான்மாக்கார் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மந்திரிகள், எம். பி.க்கள், செனட்டர்கள், அரசாங்க ஊழியர்கள் போன்ருேர் தமது சொத்து விபரங்களை வற்புறுத்தும் மசோதாபற்றி சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கது என்ருர்.

#### திரு. தகநாயக்கா

திரு. தகநாயக்கா பின்னர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

பாடசாலைகளில் பதவி வகித்த 30 பிக்குகளை ஏன் நீக்க வேண்டும்? கல்வி மந்திரி இதற்குப் பதிலளிக்க வேண்டும். முஸ்லிம் ஒருவர் கல்வி மந்திரியாக இருப்பதால் தானு? காலஞ் சென்ற பண்டாரநாயக்கா இப்பிக்குகளுக்குப் பதவி அளித்தார். அவரது கொள்கைக்கு முரணுக இன்றைய அரசாங்கம் நடக்கின்றது.

சென்ற வருடம் சிம்மாசனப் பிரசங்கத்தில் பத்திரிகை ஸ்தாபனங்கள் எடுக்கப்பெறுமென்று அறிவிக்கப்பட்டது. அந்த யோசனை கைவிடப்பட்டிருப்பின் ஜனநாயக தர்மத்தின் பெயரால் அதை வரவேற்கிறேன். பத்திரிகை நிர்வாக விஷயமாக ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்.

இதே போக்கில் இந்த அரசாங்கம் போவதாயின், இது 'வங்கி ரோட்டு' ஆகிவிடும். நிதிமந்திரிக்குப் பதிலாக திறமையான வேருெருவர் நியமிக்கப்பட வேண்டும். இன்றேல் அரசாங்கம் ஒரு வருடத்தில் பொதுத் தேர்தல் நடத்த வேண்டியேற்படும்.

# வட்டுக்கோட்டை கொலை வழக்கு விசாரணை

## இன்றும் தொடர்ந்து நடைபெறும்

யாழ்ப்பாணம், வியாழன்

கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுவரும் வட்டுக்கோட்டைக் கொலைவழக்கு இன்று நீதியரசர் டாக்டர் எச். டபிள் யூ. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வட்டுக்கோட்டை கிராமச் சங்கத்தலைவர் பி. எம். நடராசாவை, சின்னத்தம்பி இரத்தினசபாபதி என்பவர் சென்ற வருடம் ஏப்ரல் 14-ம் திகதி கொலை செய்ததாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

டாக்டர் எஸ். குமாரசாமி சென்ற வருடம் ஏப்ரல் 15-ம் திகதி அதிகாலை 3.45 க்கு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இரத்தின சபாபதியை பரிசோதனை செய்தபோது அவருக்கு 11 காயங்கள் ஏற்பட்டிருந்ததாகக் கண்டார். கொடுவாக் கத்தியால் இக்காயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பொலிஸ் சார்ஜன்ட் டி. பி. ஹசன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் சென்ற வருடம் சங்கானைப் பொலிஸ் ஸ்டேஷனில் கடமையாற்றினேன். இன்ஸ்பெக்டர் செல்வரத்தினத்தின் கட்டளைப்படி சென்ற வருடம் ஏப்ரல் 14-ம் திகதி இந்த வழக்கை விசாரிக்க இன்னொரு பொலிஸ் கான்ஸ்டபிளுடன் மோட்டார் சைக்கிளில் நான் சென்றிருந்தேன். இன்ஸ்பெக்டர் செல்வரத்தினம் ஒரு ஜீப்பில் வந்தார். சம்பவம் நடந்த இடம் பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து 2 மைல்தூரம் இருக்கும்.

நீதியரசர்:- நீர் பொறுப்பாக இருக்கும் இடத்தை முறையாக ரோந்து சுற்றிவரும் வழக்கம் உண்டா?

சாட்சி: அவ்வித வழக்கம் உண்டு.

நீதியரசர்: அப்படி ஒரு வழக்கமிருந்தால் இவ்வளவு தொகையான வழக்குகள் ஏன் அங்கு ஏற்படுகின்றன?

சாட்சி பதில் கூறவில்லை.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

நான் சம்பவம் நடந்த இடத்துக்குச் சேன்றபோது அங்கு ஒரு காரைக்கண்டேன். அந்தக் காரின் லைட்டுகள் அணைந்திருந்தன. கார் தெருவின் மத்தியில் ஓரளவு இடதுபக்கமாக நிற்பாட்டப்பட்டிருந்தது. நான் காரடிக்குச்சென்று பார்த்தபோது இறந்தவர் காரின் பின் சீட்டில் கிடந்தார். அவர் மூச்சு விட்டுக்கொண்டிருந்தார். நான் அவரிடம்கேள்வி கேட்டபோது அவர் பேசமுடியாத நிலையிலிருந்தார். அவரது வயிற்றிலும் இடதுகையிலும் ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டர் செல்வரத்தினம் வந்தார். நான் அங்கு சென்றபோது அங்கு ஒருவருமிருக்கவில்லை. சங்கரத்தை வீதி சந்தியில் மக்கள் கூடியிருந்தனர். இன்ஸ்பெக்டர் செலவரத்தினம் விசாரணை செய்யத் தொடங்கினர். நான் அதிகாலை 1-30 மணிவரை அங்கிருந்தேன். பின்பு இன்ஸ்பெக்டர் செல்வரத்தினத்தின் உத்தரவின்படி அங்கிருந்து சென்றேன். நான் எதிரியைத்தேடிச்சென்று பின்னர் அதிகாலை 3. 30 க்கு அல்லது 4 மணிக்கு சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு சென்றேன். அங்கு காலை 7-30 மணிவரை இருந்து சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இது குறித்து ஆராய முனைந்தேன். நான் நிர். 4 என்று குறிக்கப்பட்டிருந்த ஒரு பொருளைக் கண்டெடுத்து அதை இன்ஸ்பெக்டர் செல்வரத்தினத்திடம் கொடுத்தேன்.

நான் பொலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்றபோது திருநாவுக்கரசு என்பவரின் வாக்குமூலத்தைப் பார்த்தேன். நான் பொலிஸ் ஸ்டேஷனில் இருந்தபோது சில பஸ் கண்டக்டர்கள் அங்கு வந்தார்கள்.

நீதியரசர்: நீர் அவர்கள் கூறியவற்றை எடுத்தீரா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்:- அவர்கள் சில முக்கிய சமாச்சாரத்தைத் தெரிவித்திருந்தால்கூட நீர் அதை எடுத்திருக்கவேண்டுமென்று நினைக்கவில்லை.

சாட்சி: அவர்கள் எதையோ கூறினர்கள். கார் ஒன்று தெருவில் நின்றதனல் தாம் புன்னலை வழியாக வரவேண்டியிருந்ததாகத் தம்பிப்பிள்ளை தெரிவித்தார். வேருென்றும் அவர் தெரிவிக்கவில்லை.

நீதியரசர்: அவர் உம்மிடம் எதிரிபற்றி விபரம் தெரிவித்ததாக நேற்று இங்கு கூறியிருந்தார்.

சாட்சி: அது தவறு. அவர் அவ்விதம் விபரமாக எதிரி பற்றி தெரிவித்திருந்தால் நான் அவரை மறித்து அதுபற்றிக் குறித்துவைத்திருப்பேன். நான் வேட்டைக் கத்தியொன்றையும் ஒரு வெறும் சாராயப் போத்தலையும் காரினுள் கண்டேன். சம்பவம் நடந்த பின்னர் நன்ருக மழை பெய்துகொண்டிருந்தது.

வழக்கு நாளைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானிய மந்திரிகள் ராஜினமா

டோக்கியோ, ஜூலை 19

ஜப்பானிய மந்திரிசபையிலுள்ள எல்லா மந்திரிகளின் ராஜினமாக்களையும் பிரதம மந்திரி ஸ்ரீ இகேடா ஏற்றுக் கொண்டார்.

மந்திரிசபை பூராவையுமே மாற்றியமைக்க பிரதம மந்திரி உத்தேசித்திருக்கிருர்.

## இந்தியா முன் எச்சரிக்கை

ஸ்ரீநகர், ஜூலை 19

சீன, பாகிஸ்தான் ஆகியவற்றின் ஆக்ரமிப்பு நோக்கங்களிலிருந்து காஷ்மீரைப் பாதுகாக்க முக்கிய முடிவுகளை காஷ்மீர் தலைவர்களுடனும் சீனியர் ராணுவப் பொலிஸ் அதிகாரிகளுடனும் நேருஜி இங்கு பேசியபோது மேற்கொண்டார்.

பாகிஸ்தான் எல்லையிலுள்ள போர் நிறுத்த எல்லைப் பகுதியில் அதிக உஷாராக இருப்பதன் அவசியம் பற்றி விவாதத்தில் முக்கியமாகக் கவனிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பல முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள்பற்றி பிரதமர் முடிவு செய்திருக்கிருர். அவை உடனே அமுல் செய்யப்படும்.

## அயூப் மிரட்டல்

கராச்சி, ஜூலை 19

"காஷ்மீர் எல்லையில் இந்திய சைன்யமும், பாகிஸ்தான் சைன்யமும் எதிர் எதிராக நிற்கின்றன. மனிதர்கள் விசித்திரமான பிறவிகள். அதிலும் ஒரு விஷயத்தில் அவர்களுக்கு அலுப்பு தட்டிவிட்டால் என்னதான் செய்வார்களென்று யாரும் சொல்ல முடியாது" என்று பாக். அதிபர் அயூப் கான் பத்திரிகை நிருபர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

குவாலியர், ஜூலை 19

பம்பாயில் காலமான குவாலியர் மகாராஜாவின் சடலம் இங்கு தகனம் செய்யப்பட்டது. தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக மயானத்தில் 2 லட்சத்துக்குமதிகமான மக்கள் கூடியிருந்தனர்.

# இந்தியாவின் நிர்வாக திறமைக்கு

## திரு. கல்பிரய்த் பாராட்டு

சென்னை, ஜூலை 12

"இந்தியாவில், நிர்வாகத் திறமை மிகவும் சிறப்பாக இருக்கிறது. திறமைவாய்ந்த திட்டமிடுவோரும் இங்கு இருக்கிருர்கள். நன்ருகப பிரசாரம் செய்யும் திறமை இந்தியப் பத்திரிகைகளுக்கு இருக்கிறது. புள்ளி விபரங்களும் மிகத் திறமையாக வைக்கப்பட்டிருக்கின்றன. எனவேதான் இந்தியாவின் முன்னேற்றத்தில் உலக நாடுகளின் கவனம் திரும்பியிருக்கிறது. இதர நாடுகளுக்கும் இந்தியா உதாரணமாய் விளங்குகிறது" என புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதர் திரு கல்பிரய்த் சென்னையில் கூறினர்.

## ஸ்ரீ ராஜேஸ்வர தயாள்

கராச்சி, ஜூலை 18

கராச்சியில் இந்திய ஹைகமிஷனரான ஸ்ரீ ராஜேஸ்வர தயாள் 11 மாத கால இடைவெளிக்குப் பிறகு நேற்று பதவிப்பொறுப்பை மீண்டும் ஏற்ருர்.

அந்தக் காலத்தில் அவர் காங்கோ ஐ. நா காரியதரிசியின் விசேஷ பிரதிநிதியாக இருந்தார்.

விளையாட்டுப்போட்டி

# எட்டுப் புதிய உலக சாதனைகள்

## அமெரிக்க ஆண்களும் ரஷ்யப் பெண்களும் ஏற்படுத்தினர்

இம்மாதத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமைவரை விளையாட்டுத் துறையில் எட்டுப் புதிய உலக சாதனைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு ஒன்று சமப்படுத்தப்பட்டும் இருக்கின்றது.

கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் மொஸ்கோ நகரிலுள்ள லெனின் விளையாட்டு அரங்கில் ரஷ்யாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் மூன்று புதிய உலக சாதனைகளையும் பெண்கள் மூன்று புதிய உலக சாதனைகளையும் ஏற்படுத்தினர்.

ரஷ்யாவைச் சேர்ந்த வலறி புறுமை என்ற வீரர் உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் 7 அடி 4 அங்குலத்தைத் தாண்டி ஓர் புதிய உலக சாதனையை ஏற்படுத்தினர். 19 வயது மட்டும் நிரம்பிய இவ் வீரரின் சாதனை பிரமிக்கத்தக்கதாக இருக்கிறது! மழை பெய்யத் தொடங்கியதால் 7 அடி 5 அங்குல உயரத்தை இவரால் பாய முடியவில்லையாம்!

நீளம் பாய்தலில் முதன்முதலாக 27 அடிக்கு மேற்பட்ட தூரத்தைத் தாண்டி உலகைப் பிரமிக்கச் செய்த ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ரால்ப் பொஸ்டன் என்பவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை 27 அடி 1 3/4 அங்குல தூரத்தைப் பாய்ந்து தமது பழைய உலக சாதனையை 1 1/4 அங்குலத்தினல் முறியடித்தார்.

4×100 மீட்டர் அஞ்சல் ஓட்டத்தை ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த கோஷ்டி 39·1 விநாடிகளில் ஓடி, பழைய உலக சாதனையை 2/5 விநாடிகளால் முறியடித்தனர்.

பரித வட்டம் வீசுதல் நிகழ்ச்சியில் ரஷ்யாவைச் சேர்ந்த செல்வி தாமரா பிரெஸ் என்ற வீரரமணி 188 அடி 5 அங்குல தூரம் எறிந்து தமது பழைய உலக சாதனையை 11 அங்குலங்களினல் முறியடித்தார்.

நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் ரஷ்யாவைச் சேர்ந்த செல்வி தட்டியானஷெல்கனேவா என்ற வீரரமணி 21 அடி 3 அங்குலம் பாய்ந்து புதிய உலக சாதனையை ஏற்படுத்தினர். 23-6-61ல் கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த செல்வி ஹில்ரல் கிளோஸ் என்பவர் ஏற்படுத்திய சாதனையிலும் பார்க்க இது 2 1/4 அங்குலம் அதிகமானதாகும். செல்வி ஷெல்கனேவா 21 அடிக்கு மேற்பட்ட தூரத்தைப் பாய்ந்திருக்கும் இரண்டாவது பெண்மணியாகியுள்ளார்.

4×100 மீட்டர் அஞ்சலோட்டம் (பெண்கள்) நிகழ்ச்சியில் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பெண்கள் கோஷ்டி ஒரு புதிய உலக சாதனையை ஏற்படுத்தினர். 44·3 விநாடிகளில் ஓடி பழைய உலக சாதனையை 1/10 விநாடியினல் முறியடித்துள்ளனர்.

கடந்த வருடம் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்ற செல்வி வில்மா ரடல்ப் என்ற அமெரிக்க வீரரமணி 100 மீட்டர் தூரத்தை 11·3 விநாடிகளில் ஓடி தமது உலக சாதனையை சமப்படுத்தியுள்ளார்.

ஆண்களுக்கான போட்டிகளில் அமெரிக்கா 120 புள்ளிகளும் ரஷ்யா 111 புள்ளிகளும் பெற்றன. பெண்களுக்கான போட்டிகளில் ரஷ்யா 68 புள்ளிகளும் அமெரிக்கா 39 புள்ளிகளும் பெற்றன.

### ஏனைய சாதனைகள்

நியூஸிலாந்தைச்சேர்ந்தவரும் ஒலிம்பிக் விளையாட்டுகளில் தங்கம் பதக்கம் பெற்றவருமான எம். ஹல்பேர்க் என்பவர் 7-7-61ல் இரண்டு மைல் தூரத்தை 8 நிமிஷம் 30 விநாடிகளில் ஓடி ஒரு புதிய உலக சாதனையை நிலைநாட்டினர். பழைய உலக சாதனையாகிய 8 நிமிஷம் 32 விநாடிகளில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அல்பேர்ட் தொமஸ் என்பவரால் 7-8-58ல் ஏற்படுத்தப்பட்டது.

7-6-58 தொடக்கம் உயரம் பாய்தல். நிகழ்ச்சியில் உலக சாதனைகளை ஏற்படுத்திக் கொண்டுவரும் ருமேனியாவைச் சேர்ந்த அயோலண்டா பாலாஸ் என்ற வீரரமணி 8-7-61ல் 6 அடி 2 3/4 அங்குலத்தைத் தாண்டி மீண்டும் புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். உலகில் 6 அடிக்கு மேற்பட்ட உயரத்தை இதுவரை இப் பெண்மணி மாத்திரமே பாய்ந்திருக்கிருர் என்பது குறிப்பிடத் தக்கது.

### புதிய இலங்கை சாதனை

ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் இரண்டு புதிய அகில இலங்கை சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 32 வருடங்களுக்கு முன்பு தபால் தந்திப் பகுதியைச் சேர்ந்த என். ஈ. மத்யூஸ் என்பவர் 4 நிமிஷம் 30·8 விநாடிகளில் ஒரு மைல் தூரத்தை ஓடி அகில-இலங்கை சாதனையை 7-10-37ல் ஏற்படுத்தினர். இந்தச் சாதனையை 25-6-61ல் 'ஏஎஸ்' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எல். வி. டயஸ் என்பவர் 4 நிமிஷம் 29·5 விநாடிகளில் ஓடியும், 9-7-61ல் இலங்கை "ராக் அன்ட் பீல்ட்" விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த ஏ. எஸ். எம் கான் என்பவர் 4 நிமிஷம் 30·2 விநாடிகளில் ஓடியும் முறியடித்திருக்கின்றனர்.

## போர்ச்சுக்கல் படைத் தளபதி

### அங்கோலா சென்று திரும்பினர்

லிஸ்பன், ஜூலை 18

போர்ச்சுக்கல் முப்படைகளின் தலைவர் அங்கோலாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு லிஸ்பன் திரும்பினர். அங்கோலாவில் கலகக்காரர்களை அடக்குவதில் பெரும் சிரமம் உள்ளது என்று அவர் தெரிவித்தார். அங்கோலாவில் போர்ச்சுக்கல் போராட்டம் நடத்துவது மேற்கு நாடுகளின் நலனுக்காகவும் நாகரிகத்தைப் பாதுகாக்கவும்தான் என்று அவர் கூறினர்.

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு 100 தமிழாசிரியர்கள்

கொழும்பு, புதன்

அரசினர் முஸ்லிம் பாடசாலைகளுக்கு 100 தமிழ் ஆசிரியர்களை நியமிக்கும்படி தனது அமைச்சுஅதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் உத்தரவிட்டுள்ளார்.

பயிற்சி பெற்ற முஸ்லிம் தமிழாசிரியர்களின் பதவி உயர்வு பற்றியும் பரிசீலனை செய்யுமாறு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

## அரசாங்கத்துக்கு இலங்கை வர்த்தக சங்கம் யோசனை

கொழும்பு, செவ்வாய்

பல சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ள இலங்கை தேசீய வர்த்தக சங்கம் இலங்கைக்கு வேண்டிய அத்தியாவசியமான உணவுப்பொருள்களை வாங்குவதற்கு அரசாங்கமே தனி உரிமை உடையதாய் இருக்கும் கொள்கையை மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும் என்று கோரியுள்ளது. இறக்குமதிப் பொருள்களின் விலையை நிலைக்கச்செய்வதின் மூலம் வாழ்க்கைத் தரத்தைக் குறைக்க மேற்கூறிய கருத்தையும் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் அரசாங்க அதிகாரிகளும் பிரத்தியேக வர்த்தக அங்கத்தவர்களையும் கொண்ட கமிட்டியை ஏற்படுத்தி, நம்பகரமான பொருள்களை மலிவான சந்தைகளில் சிக்கனமான முறையில் வாங்கக்கூடிய வழிவகைகளை ஆராயவேண்டும் என்றும் அது ஆலோசனை கூறியுள்ளது.

## விளையாட்டுக் கழகக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. இ. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

புது வருட உத்தியோகத்தர் தேர்தலின்போது தலைவராக திரு. இ. முத்தையாவும், காரியதரிசியாக திரு. ஆர். கே. குமரையாவும், தனதிகாரியாக திரு. எஸ். நடேசுவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## விஷ உணவினல் 8 பேர் பலி

கோயமுத்தூர், ஜூலை 18

கோயமுத்தூருக்கருகில் விஷம் கலந்த காப்பியை அருந்தியதால் 8 பேர் மாண்டதாக ஒரு செய்தி கூறுகிறது.


10,000 மக்கள் புகழ்வது !

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

அலுமினியம்

★ அழகு
★ மாற்று உயர்ந்த அலுமினியம்
★ சுத்தம்
★ தாய் நாட்டுக் கைத்தொழிலுக்கே பெருமை தருவது
★ நவீன முறையில்,முற்போக்கான அதிசயமுறையில் செய்யப்படுவது
★ உறுதி, உழைப்பு

டொலர் பவுணைப் பார்த்து வாங்கி மகிழுங்கள்!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.


## 'தோல்வி மனப்பான்மையை வளர்க்கக் கூடாது'

### ஆ. ச. கூட்டத்தில் திரு. ஆசீர்வாதம் பேச்சு

மொறட்டுவ, செவ்வாய்

தேசிய கல்விக் கமிஷனிடம் விரிவான மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்ததன் மூலம் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் மாபெரும் சேவை செய்துள்ளதென்று மொறட்டுவாவில் நடைபெற்ற ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தின்போது சங்கச்செயலாளர் திரு. ஜே. டி. ஆசீர்வாதம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சங்கம் இறுதிக் கட்டத்தில் இருக்கிறது என்று சிலர் கூறிவந்ததற்கு மாறாக 41 வருடங்களாக இயங்கிவந்த இச்சங்கத்தை நாம் மறைய விடக்கூடாது. தோல்வி மனப்பான்மையை நமது அங்கத்தவர்கள் வளர்க்கக் கூடாது.

அரசியல் வாதிகளுடன் தொடர்பற்ற வகையில் பள்ளிக்கூடங்களை நிர்வகிக்க வேண்டும். தேசிய கல்வித் திட்டத்தின் கீழ் சகல ஆசிரியர்களும் ஒரு நிர்வாகத்தின் கீழ்தான் கடமையாற்றுகின்றார்கள்.

லெப்டினன்ட் சி. எம். ஜி. டயஸ் பேசுகையில் கூறியதாவது:

"சங்கம் எப்போதும் நேர்மையான கோரிக்கைகளுக்கே போராடும். ஆசிரியர்களின் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும்"


அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
Leyden L.I.L
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்.
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு
**வியாழன் 20-7-61**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 பான்ட் வாத்திய இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இரு வயலின்கள்.

இரவு 7-00 பி. முத்துக்குமாரன் - பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்த இசை, 10-00 தம்பிலோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சேலம் எஸ். ஜயலட்சுமி-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 சேலம் எஸ். ஜயலட்சுமி-பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தர பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 "செய்தித் தமிழ்" திருமலை சுவாமி – பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி - டி. எஸ். மரியானந்தம் – பாட்டு, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகில பாரத சித்திரம்.

## சுவர்க் கடிகாரம் திருட்டு பொலிஸில் புகார்

நீர்வேலி, புதன்

நீர்வேலி வடக்கு ஸ்ரீ கணேச ஜனசமூகநிலையத்திலுள்ள 170 ரூபாய் பெறுமதியுள்ள சுவர்க் கடிகாரம் ஒன்று திருட்டுப் போய்விட்டதாக நிலைய நிர்வாகிகள் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## ஏழை மாணவருக்கு இலவச புத்தகங்கள்

கொழும்பு, செவ்வாய்

ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்க பிரிட்டிஷ் கவுன்ஸில் நூல்நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விநியோகத்துக்கென 2,500 பவுன் செலவிடப்படுகிறது. பௌதிக, மிருகஇயல், பொருளியல் நூல்களை இது விநியோகிக்கிறது. பல்கலைக் கழகத் தலைவர்களின் சிபார்சின் பேரிலேயே இப்புத்தகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தக வசதியளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஏழை மாணவனும் 12 வித்தியாசமான புத்தகங்களை 1 மாதம் தொடக்கம் 1 வருடம்வரை வைத்திருக்கலாம் எனத் தெரிகிறது.

வெவ்வேறு துறையிலும் பாடப் புத்தகங்களை விநியோகிக்க கவுன்ஸில் எண்ணியுள்ளது.

# 'நிலையான அழகுக்கு வழிப்படுத்துவது இலக்கியம்'

## தமிழ்விழா 2ம் நாள் சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

"பகுத்தறிவற்ற மக்கள் மிருகங்களாகவும், மரங்களாகவும், மதிக்கப்படுவர். மக்களை மக்களாக்குவது இலக்கியக்கலை. இது அழகுக்கலை எனவும், அறிவுக்கலை எனவும் இரு பிரிவுடையது. அழகுக்கலை நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ளுவதுடன் கற்பனை உண்மையையும் மெய்ப்பாட்டுத்தன்மையையும் தன்னகத்தே கொண்டது. நிலையான அழகுக்கு வழிப்படுத்துவது விலங்கனைய மக்களைத் தெய்வத் தன்மையாக்கும் உயிர் விளக்கத்தை ஊட்டவல்லதும் அழகுக்கலை இலக்கியமே. இது அழகு, நன்மை, உண்மை என முப்பிரிவாய் முறையே அறம் பொருள் இன்பம் பயக்கவல்லது".

மேற்கண்டவாறு பண்டிதர் சோ. இளமுருகனர் 'இலக்கியப் பயன்' என்னும் பொருள் பற்றித் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் நடைபெற்ற இரண்டாம் நாள் தமிழ் வார விழாவில் சொற்பொழிவாற்றும் போது கூறினர். காலை நிகழ்ச்சிக்கு சைவாசிரிய கலாசாலைத் தமிழ்விரிவுரையாளர் திரு. நா. ஞானசம்பந்தன் தலைமைதாங்கினர்.

திரு. இளமுருகனர் தொடர்ந்து பேசியதாவது:-

"அன்பின் இலக்கணமாகத் தொல்காப்பியமும், அதன் அமைப்பு முறையை விளக்கும் திருக்குறளும், குறளின் கருவூலங்களைக் கதையுருவிலே கூறும் பெரியபுராணமும் எம்மைச் சாதாரண வீட்டிலிருந்து நிலையான வீடு அடைய வழிப்படுத்துவதாகும். இராமாயணத்திலே நாட்டுப்படலச் செய்யுளில் பொறித்துள்ள அழகுக்கலை உள்ளத்தை ஈக்கும் தன்மையன.

அடுத்து கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த செல்வி கா. புவனேஸ்வரி, செல்வி வே. புவனேஸ்வரி ஆகியோர் "இலக்கியமும்உணர்ச்சியும்" "தமிழகம் இன்றும் அன்றும்" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். வித்துவான் திருமதி. ம. இராஜேந்திரா "இலக்கியம்" பற்றிப் பேசினர்.

பிற்பகல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண மாவட்ட உதவி நீதிபதி திரு. சி. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திருமதி ம. பொன்னையா, திரு. சி. சிவசுப்பிரமணியம், வித்துவான் எஸ். கார்த்திகேசு ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள்.

சங்கீத பூஷணம் ச. பாலசிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியைத் தொடர்ந்து செயலாளரின் நன்றியுரையோடு இரண்டாம் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

## போதிய சாட்சியம் இல்லாததால் எதிரிகள் விடுதலை

மன்னர், செவ்வாய்

என். வி. டலீமா என்பவரின் காதைக் கடித்துப் படுகாயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தலைமன்னர் கிராமவிதானை எஸ். எம். கூங்ன் என்பவரையும் டலீமாவைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தலைமன்னரைச் சேர்ந்த ஜேக்கப் குரூஸ் என்பவரையும் விசாரணை நடத்திய பின் மன்னர் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார். விசாரணையின் போது மேற்படி குற்றச்சாட்டுகளுக்குப் போதிய சாட்சியங்கள் இல்லாததனலேயே நீதிபதி இவ்வாறு தீர்ப்பளித்தார்.

## ஜப்பான் தூதுகோஷ்டி

கொழும்பு, புதன்

நீர்கொழும்பு மீன்பிடி நிலையத்தில் மீன்பிடித் தொழிலில் பயிற்சியளிப்பதற்காக சென்ற வாரம் இலங்கை வந்துசேர்ந்த ஏழுபேர் கொண்ட ஜப்பான் தூதுகோஷ்டி அக்டோபர் மாதம்வரை தனது அலுவல்களை ஆரம்பிக்க முடியாதிருக்கிறது.

அக்டோபர் மாதம்வரை நீர்கொழும்பு மீன்பிடி நிலையம் பயிற்சிபெறுவதற்கு ஏற்றதாக இருக்கமாட்டாதென்று தெரிகிறது.

அக்டோபர் மாதம்வரை இத்தூதுகோஷ்டி கொழும்பில் தங்கியிருந்து மீன்பிடிப் பயிற்சிக்கான திட்டங்களைத் தயாரித்துவரும்.

இத்தூதுகோஷ்டி மூன்று வருடங்களுக்கு இலங்கையில் தங்கியிருக்கும்.


ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




இலங்கை தேநீரை அறியும்!




இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்— இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னன விதிகள்:



* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால், பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்: "மில்க்மெயிட்" பாலை எப்போதும் மறவாதீர்கள்.

"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

# “வட்ட மேசை மகாநாடு கூட்ட தயங்குவதேன்?”

## பார்லிமெண்டில் ஜே. ஆர். கேள்வி

கொழும்பு, புதன்

“வகுப்புவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வட்ட மேசை மகாநாடு நடத்த அரசாங்கம் தயங்குவதேன்?” என்று யு. என். பி. அங்கத்தவரும் கொழும்பு தெற்கு முதலாவது எம். பி. யுமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று பார்லிமெண்டில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு யு. என். பி. யின் திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்து பேசுகையில் கேட்டார்.

“அரசாங்கத்தின் செல்வாக்கைக் குறைத்த மற்றொரு காரணம் வகுப்புவாதப் பிரச்சினை. அந்தப் பிரச்சினையை உங்களால் தீர்க்க முடியாததனால் தான் இன்று அவசரகாலச் சட்டத்தின்கீழ் வாழ்கிறோம். இப்பிரச்சினையைத் தீர்க்க வட்ட மேசை மகாநாடு ஒன்றை நடத்த ஏன் தயங்குகின்றீர்கள்? மக்களை எக்காலமும் ஏமாற்ற முடியாதென்பதை உணர்ந்து கொள்ளுங்கள்” என்று திரு. ஜயவர்த்தன கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்டம் மோசமாகிவிட்டதென்று கூறிய திரு. ஜயவர்த்தன அப்படி ஒரு பிரச்சினையிருப்பதாகவே சிம்மாசனப் பிரசங்கத்தை வாசிப்பவர்கள் தெரிந்துகொள்ளமாட்டார்களென்றார். “பிரதமரைப் புகழ்ந்துரைக்கும் வசனங்களைச் சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்ப்பது வழக்கமில்லை. அந்த வழக்கத்தையெல்லாம் மீறிப் பிரதமரைப் புகழும் வசனத்தைச் சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்ப்பதற்குப் பொறுப்பாளி யார்?” என்று திரு. ஜயவர்த்தன கேட்டார்.

வெளிநாடுகளிலுள்ள

## இலங்கை ஸ்தானிகர் காரியாலயங்களை பார்வையிடுவார்

கொழும்பு, புதன்

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஸ்தானிகர் காரியாலயங்களைப் பார்வையிடுவதற்காக மிக விரைவில் வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்ள இருக்கிறார்.

திரு. டயஸ் லண்டன், பாரிஸ், பொன் ஆகிய நகரங்களில் உள்ள இலங்கை ஸ்தானிகர் காரியாலயங்களுக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

“வெளிநாடுகளிலுள்ள இலங்கை ஸ்தானிகர் காரியாலயங்கள் சிக்கனத்தை மேற்கொள்ள வேண்டும்” என்ற இலங்கை அரசாங்கத்தின் கொள்கை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது என்பதை நேரிலே தெரிந்து கொள்வதற்கு திரு. டயஸ் சுற்றுப்பிரயாணத்தைப் பயன் படுத்துவார் எனத் தெரியவருகிறது.

விரைவில் வெளிவிவகார அமைச்சில் அதிகாரிகள் வேலை மாற்றமும் நிகழவிருக்கிறது.

## நிதிமந்திரியின் தாயார் காலமானர்

கொழும்பு, புதன்

நிதிமந்திரி பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவின் தாயார் திருமதி. பிரடா டயஸ் பண்டாரநாயக்கா நேற்று கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் காலமானர்.

## தமிழ் மூலம் தந்தி பேசும் புதிய கருவி

திருச்சி, ஜூலை 18

தமிழ் மூலமே தந்திச் செய்திகளை அனுப்பக்கூடிய ஒரு புதிய கருவியை திருச்சி தபாலாபீஸைச் சேர்ந்த திரு. ஏ. சிவலிங்கம் கண்டுபிடித்துள்ளார். இக்கருவியையும் அதன் மூலம் தமிழிலேயே தந்திச் செய்திகளை அனுப்புவதையும் அவர் திருச்சிக்கு வந்த தபால் மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் முன் செய்து காட்டினர். வெள்ளப் பகுதிகளுக்கு டாக்டர் சுப்பராயன் விஜயம் செய்ததைப்பற்றி தமிழில் அனுப்பிய செய்திகள், மற்ற இடத்தில் சரியாகக் கிடைத்துள்ளது. இந்தப் புதிய கருவியை அரசாங்கம் பயன்படுத்த வேண்டுமென்று திரு. அப்துல் சலாம் எம். பி. மந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

## வீதிச் சட்டத்தை மீறுபவர்கள்

கொழும்பு, புதன்

வீதிகளின் நடுவில் இருக்கும் வெள்ளைக் கோடுகளுக்குக் குறுக்கே மோட்டார் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களுக்கெதிராக வழக்குத் தொடரப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

## யு. எஸ். பலூன் 90 ஆயிரம் அடி சென்று மீண்டது

வாஷிங்டன், ஜூலை 21

வானவெளியில் காலநிலை பற்றி ஆராயுமுகமாக அமெரிக்கா அனுப்பிய ஒரு பலூன் 90,000 அடிஉயரம் சென்றபின் கீழேஇறங்கியது. இந்தபலூன் 8 மாடிக்கட்டடத்தின் உயரத்தைக் கொண்டது. 1,45,000அடி செல்லவேண்டு மென்பதுதான் இதன் இலக்கு. ஆனல் காலநிலைக்கோளாறின் காரணமாய் இடையில் அது இறங்க நேர்ந்தது.

## டாக்டர் ஒக்பாரா

புதுடில்லி, ஜூலை 14

கிழக்கு நைஜீரியாவின் அபிவிருத்திக்கு இந்தியா உதவி புரியும் எனத்தாம் நம்புவதாய், இப்போது பாரத சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொள்ளவிருக்கும் கிழக்கு நைஜீரியப் பிரதமர் டாக்டர் ஒக்பாரா கூறினர்.

## பெட்ரோலியம் கார்ப்பரேஷன்

கொழும்பு, புதன்

நேற்றிரவு வெளியிடப்பட்ட விசேஷ வர்த்தமானியில் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவும் பொருட்டு கொலன்னவையில் இரு நிலங்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## சோனக வாலிப சங்கத் தலைவர் மொஸ்கோ செல்வார்

கொழும்பு, புதன்

இலங்கை சோனக வாலிப சங்கத்தின் தலைவர் திரு. மொகமட் கவுஸ் மொஸ்கோவில் இந்தமாதம் நடக்க இருக்கும் உலக வாலிபர் மகாநாட்டில், கலந்து கொள்வதற்காக நேற்று மொஸ்கோவுக்குப் பயணமானர். அவர் அங்கு 35 நாட்கள் வரை தங்குவார் என்றும் அங்குள்ள இஸ்லாமியருக்குச் சிரத்தையாயிருக்கும் பகுதிகளுக்கு விஜயம் செய்வார் என்றும் தெரிகிறது.

# தமிழ் பிரதிநிதிகளை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாற்றுதவரை ஜனநாயக சோஷலிசத்தை ஏற்படுத்த இயலாது.

**ஐ. தே. கட்சி**

ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்துள்ள திருத்தப் பிரேரணையில் கூறியிருப்பதாவது:-

வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகளின் உயர்வு, வீட்டுத் தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எவ்வித வழிகளையும் கூறுதிருப்பது பற்றி ஐ. தே. கட்சி வருந்துகின்றது.

நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு வரையறையான திட்டம் எதுவுமில்லை. அவசரகாலச் சட்டத்தைத் தளர்த்துவதுபற்றியும் குறிப்பிடப்படவில்லை.

**கம்யூனிஸ்ட் கட்சி**

அரசாங்கத்தின் முற்போக்கான சில கொள்கைகள் பாராட்டற்குரியன வாயினும், நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவோ, இன வேற்றுமைகளை அகற்றவோ அரசாங்கம் நடவடிக்கை எதுவும் எடுக்காதிருப்பது வருந்தத்தக்கது. வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மொழியை அரசகரும மொழியாக்குவதுபற்றிய ஏற்பாடு எதுவும் குறிப்பிடப்படவில்லை. மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதவரை இலங்கையில் ஜனநாயக ஆட்சி முன்னேற்றமடைய முடியாது.

**எம். ஈ. பி.**

சிங்களம் மட்டும் சட்டத்தையும் நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகச் சட்டத்தையும் திடமான முறையில் அமுல் நடத்துவதைப்பற்றி எதுவும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை.

செனட்சபையை நீக்குவதற்கும் இலங்கையை உடனடியாகக் குடியரசாக்குவதற்குமான யோசனைகள் கூறப்படவில்லை.

**சமசமாஜக் கட்சி**

நாட்டிலுள்ள சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் எதுவும் கூறப்படவில்லை.

பத்திரிகைகளின் ஏகபோக உரிமைகளைத் தகர்ப்பதுபற்றிக் குறிப்பிடாதிருப்பது அந்த எண்ணம் கைவிடப்பட்டதையே எடுத்துக்காட்டுகின்றது.

அவசரகாலச் சட்டத்தை விரைவில் தளர்த்துவதுபற்றியோ, தமிழ் மொழிப் பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு காண்பதுபற்றியோ சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறியிருப்பதாகத் தெரியவில்லை

மகத்தான 2 -வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

நவா (கொம்பனித்தெரு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்

ஜெமினி கணேசன் - அஞ்சலிதேவி
நடித்த
கணவனே கண்கண்ட தெய்வம்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 மணிக்கும் மாலை 5-45மணிக்கும்
தங்கவேலு – பி. கே. சரஸ்வதி
நடித்த
மேதாவிகள்

தினசரி பி. ப. 2 மணிக்கும் 3-45 மணிக்கும்
லொஸ்ட் வேல்ட்
(ஆங்கிலம்)
LOST WORLD

நாளை தொடக்கம் குதூகல ஆரம்பம்!
ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
காலை 10 மணி, பி. ப. 2 மணி, மாலை 5-15 மணிக்கும்.

புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர்.
கன்னடத்துப்பைங்கிளி சரோஜாதேவி
நடித்த
திருடாதே!

தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும் அதிவெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும் மகோன்னத தயாரிப்பு!

ஈழநாடு லிமிடெட் தாபனத்தாரால யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது